பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 01 2025 WEDNESDAY 6.30 PM

<u>மாநிலச் செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

- திருவள்ளுவரின் தொலைநோக்கு சிந்தனையை நிறைவேற்ற நாம் அனைவரும் தொடர்ந்து பணியாற்றுவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- காசி தமிழ் சங்கமத்திற்கான இணையதள பதிவு சேவையை மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.
- மதுரை – தூத்துக்குடி இடையே அருப்புக்கோட்டை வழியாக அகல ரயில்பாதை அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது
- மாட்டுப்பொங்கல் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.
- அயர்லாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 304 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>>**

திருவள்ளுவரின் தொலைநோக்கு சிந்தனையை நிறைவேற்ற நாம் அனைவரும் தொடர்ந்து பணியாற்றுவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

திருவள்ளுவர் தினத்தையொட்டி, சமூக வலைதளத்தில் தமிழில் விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தலைசிறந்த தத்துவஞானியான திருவள்ளுவரின் திருக்குறள் தமிழ் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவரின் போதனைகள் இன்றளவும் பொருத்தமாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக காலத்தால் அழியாத படைப்பாக திருக்குறள் போற்றப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

காசி தமிழ் சங்கமம் அடுத்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, 24-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கான இணையதள பதிவு சேவையை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில், கைவினைக்கலைஞர்கள், புத்தொழில் நிபுணர்கள் உட்பட ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

நடப்பாண்டில், காசி தமிழ் சங்கமம், சித்த மருத்துவ முறையில் அகத்தியரின் பங்களிப்பு மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கொண்டாடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், மகளிர், சிறுதொழில் முனைவோர், ஆராய்ச்சியாளர்கள் என்ற பிரிவுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்விழாவின் ஒரு பகுதியாக மத்திய பல்கலைக்கழகங்களை சேர்ந்த 200 தமிழ் மாணவர்கள், வாரணாசி, பிரயாக்ராஜ் மற்றும் அயோத்தியை பார்வையிட உள்ளதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

மகா கும்பமேளாவில் பங்கேற்கும் வகையில், காசி தமிழ் சங்கமம் நடத்தப்படுவதாக சென்னை ஐ ஐ டி இயக்குனர் திரு காமகோடி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - காமகோடி – 20 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மதுரை – தூத்துக்குடி இடையே அருப்புக்கோட்டை வழியாக அகல ரயில்பாதை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசை, தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த திட்டத்திற்கான நிலம் கையப்படுத்தும் பணியில் எந்த சிக்கலும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து, இதற்கான பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் திரு சிவசங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மாட்டுப்பொங்கல் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

கிராமப்பகுதிகளில் மாடுகளுக்கு அலங்காரம் செய்து, பொங்கல் வைத்து, வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

கால்நடைகளை தெய்வமாக போற்றி பொங்கல் வைத்து இந்நாளை கொண்டாடியதாக வேலூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - 40 செகண்ட்ஸ்)*

மதுரை பாலமேட்டில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் ஏராளமான காளைகளும், மாடுபிடி வீரர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் போட்டிப்போட்டுக்கொண்டு பிடித்து பரிசுகளை தட்டிச்சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ரகுராஜா - 51 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் வீசிய வலையில் சிக்கி கரை ஒதுங்கிய ராட்சத திமிங்கிலம் மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது.

வலையை அறுத்து மீனவர்கள் மிகுந்த சிரமத்திற்கு இடையே திமிங்கலத்தை கடலுக்குள் விட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் டைட் - குமார் - 38 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டம் வாகரையில் மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பசுமை மாரத்தான் போட்டியை மாநில அமைச்சர் திரு சக்ரபாணி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

தேனி மாவட்டத்தில் உள்ள முல்லைப்பெரியாறு அணையை கட்டிய பென்னிகுயிக்கின் பிறந்த தினத்தை முன்னிட்டு, லோயர் கேம்ப் பகுதியில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாநில அமைச்சர் திரு ஐ. பெரியசாமி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாம்பழத்துறையாறு நீர்த்தேக்கத்தில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் இலங்கைக்கு கடத்த முயன்ற 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான பீடி இலைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

----------------

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே மாட்டுப்பொங்கலையொட்டி, எருது விடும் விழா இன்று நடைபெற்றது.

--------------

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் அவசரகால உதவிகளுக்கான தொலைபேசி எண்களை கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அயர்லாந்துக்கு எதிரான 3-வது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 304 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா தொடக்கம் முதலே அதிரடியாக ஆடி, 5 விக்கெட் இழப்பிற்கு 435 ரன் குவித்தது.

Pratika Rawal 129 பந்துகளில், 154 ரன் எடுத்தார்.

Smiriti Mandana அதிரடியாக ஆடி 80 பந்துகளில் 135 ரன் குவித்தார்.

436 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த அயர்லாந்து, தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 31 புள்ளி நான்கு ஓவரில், 131 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது

அதிகபட்சமாக Sarah Forbes 41 ரன் எடுத்தார்.

தீப்தி சர்மா அபாரமாக பந்துவீசி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரை அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

-----------------

இந்தியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Anupama Upadhyaya காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-18 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Rakshitha Sree—ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>**